சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர், உடையகுளம், கோட்டூர் போன்ற பகுதிகள் நெல் அதிகமாக விளையக்கூடிய பகுதிகளாகும். எனவே, ஆனைமலை, கோட்டூர் பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை நிரந்தரமாக அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலை, கோட்டூர் பகுதிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த ஆய்வுகளின் அடிப்படையில், தேவைப்படும்பட்சத்தில், உடனடியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

97—

தொழில் வளம்

***53794—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதியை தொழில் வளம் மிகுந்த பகுதியாக உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள வினாவில், திருத்தணி தொகுதியை தொழில் வளமாக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது திருவள்ளூர் மாவட்டத்தினைச்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 மார்ச் 31]

சேர்ந்ததாக உள்ளது. ஏற்கெனவே திருவள்ளூர் மாவட்டம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் தொழில்கள் நிறைந்த மாவட்டமாக இருக்கின்றது. எனவே, திருத்தணியில் தனியாக தொழிற்சாலை அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும், மொழியையும் போற்றிப் பாதுகாப்பதும், வளர்ப்பதும் திருக்கோயில்களே. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் இறைவழிபாடும், ஆன்மிகமும் தழைத்தோங்கி நாடெங்கும் தெய்வ மணம் வீசுகிறது. அதற்குக் காரணம், தெய்வப் பிறவியாக, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்து, ஜகத்தை ஆண்டுகொண்டிருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க பிப்ரவரி மாதத்தில்தான் தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத ஐயர் பிறந்தார். மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்த பிப்ரவரி மாதத்தில்தான் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்தார். மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்த பிப்ரவரி மாதத்தில்தான் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கன் பிறந்தார். மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்த பிப்ரவரி மாதத்தில்தான் புகழ்பெற்ற விஞ்ஞானிகள் டார்வின், கலிலியோ, தாமஸ் ஆல்வா எடிசன் ஆகியோர் பிறந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்த பிப்ரவரி மாதத்தில்தான் இராமகிருஷ்ண பரமஹம்சர் பிறந்தார். அமைதி, வளம், வளர்ச்சி பிறந்த மாதமும் மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்த பிப்ரவரி மாதத்தில்தான். அதனால்தான் தமிழகம் மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்த நாளை வருடம் முழுவதும் வறுமை போக்கி நலத் திட்டங்கள் வழங்கும் விழாவாகக் கொண்டாடி மகிழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழர்களின் உரிமைகளை மீட்பதற்காகவும், மாணவருக்கும், மீனவருக்கும், உழவனுக்கும், மகளிருக்கும் உயர்வு தர சுழன்று, சுழன்று தன் ஆயுளையே கரைத்துக்கொண்ட தியாகச் சுடராக, நெருப்பாற்றில் நீந்துகின்ற வீரமும், துணிவில், அறிவில்,

ஆளுமையில் சிறந்து விளங்கி வரியில்லாத நிதிநிலை அறிக்கையைக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் தமிழக மக்கள் வாயார வாழ்த்திப் பாராட்டுகிறார்கள். நூறு கோடி தமிழர்களின் வாழ்வில் அமைதி, வளம், வளர்ச்சி காண மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக முதல்வராக பட்டாபிஷேகம் செய்துகொள்வார்கள். அதுதான் உலகத் தமிழ் மக்களின் பிரார்த்தனை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதியைப் பொறுத்தவரையில், பரந்த நிலப்பரப்பு கொண்ட பகுதியாகும். மலையும், தரிசு நிலங்களும், சாகுபடியற்ற நிலங்களும் மிக அதிகமாக உள்ளன. அதுமட்டுமல்ல, போக்குவரத்து வசதி என்று எடுத்துக்கொண்டால், சென்னை விமான நிலையத்திலிருந்து 100 கி.மீ. தூரத்திற்கும், சென்னை துறைமுகத்திலிருந்து 100 கி.மீ. தூரத்திற்கும் நேரடியாக சாலை வசதி இருக்கின்றது. திருத்தணி தொகுதியைச் சுற்றியுள்ள ஸ்ரீபெரும்புதூர், ராணிப்பேட்டை, கும்மிடிப்பூண்டி ஆகிய தொகுதிகளில் சிப்காட் வளாகம் அமைக்கப்பட்டு தொழில் வளம் சிறந்து விளங்குகின்றது. திருத்தணி தொகுதியைப் பொறுத்தவரையில், ஒதுக்கப்பட்ட தொகுதியாக, ஒரு தொழிற்சாலைகூட இல்லாத ஒரு பகுதியாக இருந்து வருகிறது. ஆனால், அந்தப் பகுதி மலையும், மலை சார்ந்த பகுதியாக இருப்பதோடு, அரசுப் புறம்போக்கு நிலமும் மிக அதிகமாக இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மக்களின் முதல்வர் அவர்களிடம் ஆலோசனை கேட்டு, எப்படி 3 தொகுதிகளிலே சிப்காட் வளாகம் அமைக்கப்பட்டிருக்கிறதோ அதேபோன்று திருத்தணி தொகுதியிலும் சிப்காட் வளாகம் அமைத்தால் தொழில் வளம் பெருகும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் ஏற்கெனவே 3 சிப்காட் வளாகங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

2015 மார்ச் 31]

திருத்தணியிலே ஒரு சிப்காட் வளாகம் அமைக்க வேண்டும். அங்கே தரிசு நிலம் இருக்கிறது, அரசுப் புறம்போக்கு நிலம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஆய்வு செய்து, தரிசு நிலங்கள், அரசுப் புறம்போக்கு நிலங்கள் இருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அங்கு புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கு, தொழில் பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்திலே இருங்காட்டுக்கோட்டையிலே இருக்கின்ற நிலங்கள் மேய்ச்சல் நிலங்களாகத்தான் இருந்தன. சரியான நிலம் எடுத்து, சாலைகள் அமைத்து, அங்கே சிப்காட் வளாகம் அமைத்த பின்புதான் பன்னாட்டு நிறுவனங்களெல்லாம் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு முன்வந்தார்கள். திருத்தணியிலே பயிர் செய்யாத புறம்போக்கு நிலங்கள் அதிகமாக உள்ளன, மேய்ச்சல் நிலங்கள் அதிகமாக உள்ளன, மலைப்பகுதி அதிகமாக உள்ளது. அந்தப் பகுதியிலே சிப்காட் வளாகம் அமைத்தால்தான் தொழில் தொடங்குவதற்காக முதலாளிகள் வருவார்கள். ஆகவே, அங்கு சிப்காட் வளாகம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் புதிய தொழில் பூங்கா அமைப்பதில், பல்வேறு தொழிற்சாலைகளைக் கொண்டு வருவதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக இருக்கிறது. நேற்றையதினம், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஒரு சிப்காட் வளாகம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு இடம் தேர்வு செய்கின்றபோது பல்வேறு நெருக்கடிகள் வருகின்றன

என்று தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் திரு. செங்குட்டுவன் அவர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்புகூட கொடுத்திருக்கிறார். கிருஷ்ணகிரியிலே, ஓசூரிலே அமைக்கின்ற தொழிற்பேட்டையை அடிமாட்டு விலைக்கு குறைத்து வாங்கிக்கொண்டிருக்கிறீர்கள். அதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அதற்குப் பதில் சொல்கின்றேன். கடந்த காலத்தில், அவர் சட்டமன்ற உறுப்பினராக இங்கே இருந்தபோது, அவருடைய தலைவர்தான் தொழில் துறை மானியக் கோரிக்கையில் பதில் சொல்கின்றபோது, ஓசூரிலே 4,969 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு புதிய தொழில் பூங்கா அமைக்கப்படும் என்று சொன்னார்கள். இன்று அவர்கள் எதிர்க்கட்சியாக இருக்கின்ற காரணத்தினால், அந்த இடத்தில் புதிய தொழிற்பேட்டையைக் கொண்டு வரக்கூடாது என்று போராடிக் கொண்டிருக்கின்றார்கள். இதுபோன்ற அரசியல் காரணங்களுக்காக ஒவ்வோர் இடத்திலும் போராடுகின்றபோதுதான் புதிய தொழில் பூங்கா அமைப்பதிலே தடை ஏற்படுகின்றது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பகுதி அரசுப் புறம்போக்கு பகுதியாகவும், தரிசு நிலப் பகுதியாகவும் இருக்கின்ற காரணத்தினாலே, அங்கே தொழிற்சாலைகள் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

98—

பேருந்து முன்பதிவு மையம்

***32991—திரு. எம்.கே. அசோக்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—